1970 செப்டம்பர் 9]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கரா பரப்பில் கொக்கோ பயிரிட கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் மூலமாக ஒரு திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது அவர்களது ஆய்வு முடிந்த பிறகு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி மாவட்டத்தில் கொக்கோ பயிரிடுகிறவர்களுக்கு வட்டி இல்லாக் கடனைக் கொடுத்து ஊக்கு விக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது 300 ரூபாயிலிருந்து இரண்டாயிரம் வரை கடனைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். வட்டி இல்லாமல் கொடுக்கிற திட்டம் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி : நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் கொக்கோ பயிர் வெற்றிகரமாக வருவதால் நெல்லை மாவட்டத்திலும் கொக்கோ ப்ளாண் டேஷனை ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நெல்லை மாவட்டத் தைப்பற்றிய குறிப்பு இல்லை.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : தனியார் காடுகளில் சந்தன மரத்தோடு கொக்கோ மரத்தையும் பயிரிடுகிறார்கள். அது போலவே சர்க்கார் காடு களிலும் பயிரிட முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆலோசிக்கலாம்.

தமிழ்நாட்டில் ராடார் சாதனம்

* 322 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புயல் வருவதை முன் கூட்டியே அறிவிக்கும் வகை யில் ராடார் சாதனம் நிறுவ இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் உத்தேசித் துள்ளதா?

(இ) எந்தெந்த இடங்களில் நிறுவப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம், தமிழ் நாட்டின் கிழக்கு கடற்கரையோரமாக இரு ராடார்களை நிறுவ இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் யோசித்துள்ளது.

(இ) 1971-ம் ஆண்டு சென்னை நுங்கம்பாக்கத்தில் ஒரு ராடாரும் 1972-ம் ஆண்டு நாகப்பட்டினத்தில் மற்றொரு ராடாரும் நிறுவப்படும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : புயல் வருவதை முன்கூட்டியே அறிவிக்கக்கூடிய ராடார் சாதனத்தை, மீனவர் சமுதாயம் பெருவாரியாக வசிக்கும் கன்னியாகுமரியில் நிறுவ இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இந்தப் பகுதிகளில் ஆறு ராடார்களை நிறுவவேண்டும் என்று தீர்மானித்து, அவைகளில் ஒன்றை ஆந்திரத்திலுள்ள விசாகப் பட்டினத்தில் நிறுவி இருக்கிறார்கள். நமது தமிழ்நாட்டில் நுங்கம்பாக்கத்தில்

ஒன்றும், நான் முன்பே கூறிய நாகப்பட்டினத்தில் ஒன்றும் நிறுவ இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அதற்குரிய நடவடிக்கை இன்னும் எடுக்கவில்லை.

Lifting of Milo and Wheat stocks

* 3 *Private Notice Question*—THIRU P. G. KARUTHIRUMAN : Will the Hon'ble Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether the Government and the Hon'ble the Food Minister have received any representation in March 1970, from the wholesalers in Chingleput district that Milo and Wheat stocks were lifted by the wholesalers of Alandur from the Government Avadi Godown without the order of the District Supply Office, Chingleput and District Revenue Office, Chingleput;

(*b*) if so, the action taken thereon; and

(*c*) the quantum involved in the same?

THE HON. THIRU P. U. SHANMUGHAM :

(*a*) A representation was received in March 1970, alleging that two wholesalers had taken deliveries of wheat without the orders of the District Revenue Officer or District Supply Officer with the connivance of certain lower officials.

(*b*) The petition was referred to the Collector of Chingleput for enquiry and the Collector has sent a report after preliminary investigation;

(*c*) A verification of the records has revealed seven cases of unauthorised deliveries of wheat and milo involving 90 tonnes of wheat and 60 tonnes of milo. Action is being taken against the officials responsible for the irregularity.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இவ்வளவு பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிராமல், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாம் அல்லவா? சர்க்கார் அஜாக்கிரதையினால்தான் அப்படி நடந்தது என்பதை அரசு உணருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பொறுப்பு இருந்த காரணத்தால்தான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பொறுப்பு இல்லாத காரணத்தால் பொறுப்பு இல்லாமல் பேசுவது எங்கள் பழக்கமல்ல. பொறுப்போடு நடந்துகொண்டதால்தான் உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எத்தனை டன் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறது? அதன் மதிப்பு எவ்வளவு ரூபாய் என்று சர்க்காருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே நான் அளவுதான் சொன்னேன். பணத்தைப்பற்றிய விவரம் இல்லை. 90 டன் கோதுமை, 60 டன் மைலோ என்று குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (■) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினராகல் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]